# உங்களுடைய மனைவிகளை சரிப்படுத்துங்கள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

43. உங்களில் சில மனிதர்கள், கோழியின் மார்பெலும்பை உங்களை விட்டு நீக்கி விட்டு, உங்களில் உண்மையாகவே முதுகெலும்பை பெற்று, **உங்களுடைய மனைவிகளை சரிப்படுத்துங்கள்**. **தெருவில் இறங்கி ஓடும் மகளுக்கு ஒரு அறை கொடு.** உங்களுடைய சிறு வயது மகள் தெருவில் ஓடி, ஏதோவொரு மனிதன் அவளிடம் தவறாக நடந்து கொண்டால், நீங்கள் திரும்பிச் சென்று, அம்மனிதனைக் கைது செய்யும்படி நீங்கள் விரும்புவீர்கள். **நீங்கள் கண்டிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்**. **சகோதரர்களே, நீங்கள் மனிதனாக இருக்கிறீர்கள்.** அது சரியே. நீங்கள் அப்படிப்பட்ட ஒருவராகத் தான் இருக்கிறீர்கள்.

**நீங்கள் வீட்டை ஆளுகை செய்பவர்களாக இருக்க வேண்டும்.** **அந்தப் பெண் அவ்வாறு செய்ய அனுமதித்த காரணத்திற்காக தேவன் உங்களைப் பொறுப்பாளியாக்குவார்**: அவள் தன்னுடைய தலைமயிரெல்லாம் அலங்கோலமாகவும், ஒரு சிகரெட்டுடனும், தன்னுடைய

முகமெல்லாம் சாயம் பூசினவளாயும் இரவில் வீட்டிற்கு வருவதை நீங்கள் அனுமதிக்கும் காரணத்தால். எனக்கும் இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால், சகோதரனே, ஒரு காரியம் என்னவெனில், **என்னுடைய ஜீவன் இருக்கும் வரை, துப்பாக்கி குழாயிலுள்ள நீண்ட மரக்கம்பு** (barrel slat) **அருகிலேயே வைக்கப்பட்டிருக்கும், நான் என்னுடைய கடமையைச் செய்வேன்.** ஆம், ஐயா. ஆம், ஐயா. அவர்கள் அப்படித் தான் இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்.

44. சகோதரனே, கென்டக்கியின் கல்வியறிவில்லாத நிலையைக் குறித்துப் பேசுகிறீர்கள். நீங்கள் அவர்களுடைய மேலான நிலைக்கு வருவதற்கு உங்களுக்கு அதிக காலம் ஆகும். அது சரியே. பெண்களாகிய அவர்களில் ஒருவர் இவ்விதமாக வரட்டும், அந்த சிறிய வயதான தாயார் அந்தச்சிறிய பழமையான தொப்பியோடு (sunbonnet) எவ்விதம் நடந்து கொள்வாள் என்பதைக் கவனியுங்கள். அவள்,

"சகோதரனே, ஒரு மரக்கிளையை இங்கே கொண்டு வாருங்கள்" என்பாள். அவள் மூன்று அல்லது நான்கு நாட்கள் வீட்டை விட்டு வெளியே போகவே மாட்டாள் என்று கூறுகிறேன், ஏனெனில் அவளால் அது முடியாது. அது சரியே. அப்படியிருக்க நீங்கள், "அவள் பித்துபிடித்தவள்" என்று சொல்லுகிறீர்கள்.

*செய்தி:* 56-10-04 *ஓர் கலியாண விருந்து*

★★★★★